16

# தன்னிடத்தில் உள்ளவற்றைக் கொண்டு தன்னால் முடிந்தவற்றைச் செய்திருந்த சபை

## (3:7-13)

இயேசு, சபைகளில் மிகச்சிறந்தவற்றையும் மிக மோசமானவற்றையும் கடைசிக்காக விட்டு வைத்திருந்தார். இந்த எடுத்துரைப்பில் நாம், மிகச்சிறந்த சபையாகிய பிலதெல்பியாவைப் பற்றிப் படிப்போம்.

பிலதெல்பியா நகரம் சர்தையில் இருந்து தெற்கு - தென்கிழக்கில் இருந்தது.[1] இது கடற்கரையில் இருந்த மற்ற நகரங்களைப்போல் அவ்வளவு பெரியதாகவோ அல்லது வளமானதாகவோ அல்லது நன்கு அறியப்பட்டதாகவோ இருந்ததில்லை, ஆனால் இது இன்னமும் நினைவுகூரத்தக்க பல பண்புகளைக் கொண்டிருந்தது. இதன் பெயரானது இதைத் தோற்றுவித்தவராகிய இரண்டாம் அட்டாலஸ் பிலடெல்ஃபஸ் என்ற பெர்கமுவின் அரசரைக் கனப்படுத்திற்று. "Philadelphus" என்ற வார்த்தையானது, "அன்பு" (*philia*) என்பதற்கான கிரேக்க வார்த்தையையும் "சகோதரன்" (*adelphos*) என்பதற்கான வார்த்தையையும் இணைத்துப் பெறப்பட்டதாக உள்ளது; இவ்விதமாக இது, "சகோதரனின் அன்பு" அல்லது "சகோதர அன்பு" என்று அர்த்தப்படுகிறது.[2] அந்தப் பட்டப்பெயர், அட்டாலஸ் அரசர் தமது மூத்த சகோதரரான யூமெனெஸ் (Eumenes) என்பவர்மீது கொண்டிருந்த பற்றுறுதியின் காரணமாக அவர் (அட்டாலஸ்)மீது பொழியப்பட்டிருந்தது.

மீசியா, லிடியா மற்றும் பிரிகியாவுக்குச் செல்லும் வர்த்தகச் சாலைகளின்மீது இருந்த இந்த பிலதெல்பியா நகரம் "கிழக்கிற்கான நுழைவாயில்" என்று அறியப்பட்டிருந்தது. இது - லிடியாவிலும் பிரிகியாவிலும் கிரேக்க மொழியையும் கிரேக்க கலாச்சாரத்தையும் பரப்புவதற்கென்று - ஒரு பணி நகரமாக அட்டாலஸினால் நிலைநாட்டப்பட்டிருந்தது. இது ஒரு பெரிய நகராயிருந்ததில்லை, ஆனால் இது ஒரு வளமிக்க பகுதியில் இருந்தது, மற்றும் இது தனது திராட்சரச உற்பத்திக்காக நன்கு அறியப்பட்டிருந்தது. இதன் கோவில்கள் மற்றும் பொதுக்கட்டிடங்

களின் எண்ணிக்கை மற்றும் பெருஞ்சிறப்பு ஆகியவற்றின் காரணமாக இது சிலவேளைகளில் "சிறிய ஏதென்ஸ் (அத்தேனே)" என்று குறிப்பிடப்பட்டது.

இந்த நகரத்தின் புதைபொருள் ஆராய்ச்சியில் கிடைத்த அமைப்பு ஒன்று கவனிக்கப்பட வேண்டும்: இது ஒரு தவறான (பூமிக்) கோட்டின்மீது கட்டப்பட்டிருந்தது எனவே இது பூமியதிர்ச்சிகளில் தனக்குரிய பங்கைக் காட்டிலும் அதிகமானவைகளைப் பட்டு அனுபவித்து இருந்தது.[3]

> கி.பி. 17ல் ஏற்பட்ட ஒரு பயங்கரமான பூமியதிர்ச்சியினால், ... (சர்தை உட்பட) இந்தப் பகுதியில் இருந்த மற்ற நகரங்களுடன், பிலதெல்பியா நகரமும் அழிக்கப்பட்டது ... அந்தப்பகுதியை அச்சுறுத்திய தொடர்ந்த நிலநடுக்கங்களினால் இதன் மக்கள் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து பயத்திலேயே இருந்தனர், இந்த பயத்தின் காரணமாக, மக்களில் பெரும்பாலானவர்கள் நகரத்திற்கு வெளியில் பக்கத்தில் இருந்த கிராமப்பகுதியில் குடிசைகளில் வாழ்ந்தனர்.[4]

கர்த்தருடைய மக்களின் - கடந்த காலத்தில் கடுமையாக சோதிக்கப்பட்டதும் எதிர்காலத்தில் இன்னும் மோசமானவற்றை எதிர்கொள்ள இருந்ததுமான - சபைக்குழுமம் ஒன்று அந்த நகரத்தில் கூடி வந்துகொண்டிருந்தது என்பதுதான், கர்த்தருக்கு அந்த நகரத்தைப் பற்றி முக்கியமான விஷயமாக இருந்தது.[5] இயேசுவின் கண்டனமற்ற இந்தக் கடிதம், அவருக்கு விலையேறப்பெற்றதாக இருந்த இந்த சிறு குழுவை ஆறுதல்படுத்துவதற்காக எழுதப்பட்டது.

## அவரது நபர்த்துவத்தின் நிமித்தம் ஆறுதல் (3:7)

இதன் உறுப்பினர்களுக்கு இயேசு, முதலில் தமது அடையாளத்தை நினைவூட்டியதன் மூலம் ஆறுதல் படுத்தினார்: "பிலதெல்பியா சபையின் தூதனுக்கு எழுதவேண்டியது என்னவெனில்: பரிசுத்தமுள்ளவரும், சத்தியமுள்ளவரும், தாவீதின் திறவுகோலை உடையவரும், ஒருவரும் பூட்டக்கூடாதபடிக்குத் திறக்கிறவரும்,[6] ஒருவரும் திறக்கக்கூடாதபடிக்குப் பூட்டுகிறவருமாயிருக்கிறவர் சொல்லுகிறதாவது" (வசனம் 7). ("தமது வலதுகரத்தில் ஏழு நட்சத்திரங்களை ஏந்திக் கொண்டிருந்தார்" என்ற விளக்க படத்தைக் காணவும்.)

### துன்புறுத்துபவர்கள் வெளிப்படுத்தப்படுவார்கள்

இயேசு தம்மை, "பரிசுத்தமுள்ளவர்" என்று அடையாளப்படுத்தினார். "பரிசுத்தமுள்ளவர்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை, "பரிசுத்தமுள்ள [ஒரு]வர்" என்று அர்த்தப்படுகிறது; இதன் தொடக்ககாலச் சொற்றொடரானது தேவனுக்கென்று ஒதுக்கி வைக்கப்பட்டதாக இருந்தது (ஏசாயா 40:25; ஆபகூக் 3:3; வெளிப்படுத்தின விசேஷம் 6:10). இவ்விதமாக இயேசு, தமது தெய்வீகத்தை உறுதிப்படுத்தினார் - ஆனால் அதற்கும் அதிகமானதை அவர் செய்தார். பரிசுத்தத்தின் தேவன் என்ற வகையில், அவர் பாவத்தைச் சகித்துக் கொள்ள முடியாது, அதைச் சகித்துக்கொள்ள

*மாட்டார். இந்த விவரிப்பு, துன்மார்க்கர், அதிலும் குறிப்பாகக் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்துபவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்பதற்கு உத்தரவாதமாக இருந்தது.*

*அடுத்ததாக அவர், ''சத்தியமுள்ளவர்'' (நேரடியான அர்த்தத்தில், "சத்தியமுள்ள[ஒரு]வர்") என்று தம்மைக் குறிப்பிட்டார். பிலதெல்பியா நகரத்தில் பொய்க்கடவுள்களும் பொய்யான யூதர்களும்கூட நிறைந்திருந் தனர் (3:9), ஆனால் இயேசு உண்மையானவராகவும் நம்பத்தக்கவராகவும் இருந்தார்.*

*இதுபோன்ற பண்புகள், துன்புறுத்தப்பட்டுக் கொண்டிருந்த கிறிஸ்தவர்களுக்கு ஆறுதலாய் இருந்தனவா? அதிகாரம் 6ல், வேதசாட்சி யாக மரித்தவர்கள் கர்த்தரிடத்தில் வேண்டுதல் எழுப்பியபோது, அவர்கள் அவரை "பரிசுத்தமும் சத்தியமுமுள்ள(வர்)" என்று குறிப்பிட்டனர் (6:10): அவர் பரிசுத்தமுள்ளவராக இருப்பதால், பாவத்தை நியாயந்தீர்ப்பார் என்று அவர்கள் அறிந்திருந்தனர். அவர் சத்தியமுள்ளவராக இருப்பதால், தமது மக்களைத் தற்காப்பார் என்று அவர்கள் அறிந்திருந்தனர்.*

**அதிகாரம் செயல்படுத்தப்படும்**

*இயேசு, "தாவீதின் திறவுகோலை உடையவரும்" என்று தம்மைப் பற்றி எடுத்துரைத்தார் (ஏசாயா 22:15-25ஐக் காணவும்).[7] ஒரு "திறவுகோலை" கொண்டிருத்தல் என்பது ஒருவர் அதிகாரத்தைக் கொண்டிருத்தலை,[8] அதிலும் குறிப்பாக, அனுமதியை அளித்தல் அல்லது மறுத்தல் என்பதற்கான அதிகாரத்தைக் கொண்டிருத்தலைக் குறித்தது.[9] இயேசு, தாவீதின் திறவுகோலைக் கொண்டிருந்தார் என்ற உண்மையானது, அவர் தாவீதின் வம்சவழியில் வந்திருந்த மேசியாவாக இருந்தார் (2 சாமுவேல் 7:16) என்பதையும் இப்போது அவர் தாவீதின் அரியணையில் ஆளுகை செய்தார் (நடபடிகள் 2:30-36) என்பதையும் நிரூபித்தது.*

*இயேசுவே இந்தத் திறவுகோலுக்கு முற்றிலும் உரியவராய் இருந்தார். ஆகையால், அவர் திறந்தபோது, எவரொருவரும் பூட்ட முடியாதிருந்தது; மற்றும் அவர் பூட்டியபோது, எவரொருவரும் திறக்க முடியாதிருந்தது. பிலதெல்பியாவில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு முன்பாக அவர், "திறந்தவாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான்'' என்பதை அவர்களுக்குக் கூறினார் (3:8ஆ). கர்த்தருடைய சபைக்கான அவரது திட்டங்களைச் சாத்தான் தற்காலிக மாகத் தடைசெய்து இருக்கலாம், ஆனால் முடிவில், தேவனுடைய நோக்கங்களே நிறைவேற்றப்படும்.*

## *அவரது புகழ்ச்சியின் நிமித்தம் ஆறுதல் (3:8-10அ)*

*ஒவ்வொருவருமே பாராட்டப்பட விரும்புகின்றனர், உண்மையுள்ள இந்த சபைக்கு இயேசு தமது பாராட்டுதலைக் காண்பித்தார்:*

*உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன், உனக்குக் கொஞ்சம் பெலன்*

*இருந்தும், நீ என் நாமத்தை மறுதலியாமல், என் வசனத்தைக் கைக்கொண்டபடியினாலே, இதோ, திறந்தவாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான். … என் பொறுமையைக்[10] குறித்துச் சொல்லிய வசனத்தை நீ காத்துக்கொண்டபடியினால், … பூச்சக்கரத்தின்மேலெங்கும் வரப்போகிற சோதனை காலத்திற்குத் தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன் (வசனங்கள் 8-10அ).*

### சொற்பமானது ஆனால் பயனுள்ளது

*சபைக்குழுமத்தின் "கொஞ்சம் பெலன்" பற்றி இயேசு பேசினார். இயேசு, அவர்களின் சிறிய எண்ணிக்கையிலான உறுப்பினர்த்துவம் பற்றி, தாலந்துகளில் இருந்த பஞ்சம் பற்றி அல்லது குறைவாக இருந்த நிதி ஆதாரமூலங்கள் பற்றிக் குறிப்பிட்டிருக்கலாம். சபைக்குழுமத்தில் இருந்த சில உறுப்பினர்களின் சமூக நிலையின் காரணமாக, அதை சமுதாயம் கண்ணோக்கியிருந்த வகையைக்கூட அவர் மறைமுகமாக உணர்த்தியிருக்கலாம் (1 கொரிந்தியர் 1:26ஐக் காணவும்).*

*இயேசு அவர்களைச் சங்கடப்படுத்துவதற்காக "கொஞ்சம் பெலன்" என்பதைப் பேசவில்லை, ஆனால் அவர்களை உற்சாகப்படுத்துவதற்காகவே அதைப் பற்றி அவர் பேசினார். அவர்கள் ''கொஞ்சம் பெலன்'' கொண்டிருந்தனர் என்பது உண்மையாக இருந்தாலும், அதை அவர்கள் ஒன்றும் செய்யாதிருப்பதற்கான சாக்குப்போக்காகப் பயன்படுத்தியிருக்கவில்லை. மாறாக அவர்கள், தங்களிடத்தில் உள்ளவற்றைக் கொண்டு தங்களால் முடிந்ததைச் செய்திருந்தனர். ஆல்பிரட் பிளம்மர் அவர்களின் கூற்றுப்படி, வசனத்தின் இந்தப் பகுதியினுடைய வலியுறுத்தம் பின்வருமாறு உள்ளது: "நீ கொஞ்சம் பெலன் கொண்டுள்ளதால், மற்றும் அந்தக் கொஞ்சத்தை நன்முறையில் பயன்படுத்தியதால், நான் உன்னிடத்திலிருந்து வேறு எவரும் அபகரிக்க இயலாத வாய்ப்பை உனக்குக் கொடுத்துள்ளேன்."[11]*

*நாம் செய்யக்கூடியவற்றைப் பார்க்கிலும் அதிகமானவற்றைத் தேவன் நம்மிடத்தில் இருந்து ஒருக்காலும் எதிர்பார்ப்பதில்லை, ஆனால் அவர் நமக்குக் கொடுத்துள்ள ஆதாரமூலங்களை நாம் பயன்படுத்த வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கின்றார். "நம்மால் கொஞ்சமே செய்யமுடியும் என்பதால் நாம் ஒன்றும் செய்யப்போவதில்லை" என்ற தத்துவம் கொண்ட கிறிஸ்தவர்களாய் உள்ள தனிநபர்களையும் சபைக்குழுமங்களையும் நான் அறிந்துள்ளேன். இதற்கு மறுபுறத்தில், பிலதெல்பியாவில் இருந்த சபையானது, மாற்கு 14:8அ வில் இயேசு பாராட்டிய, ''தன்னால் இயன்றதைச் செய்த" பெண்ணைப்போல் இருந்தது.*

### துன்புறுத்தப்பட்டது ஆனால் விடாமுயற்சி கொண்டிருந்தது

*உண்மையுடன் நிலைத்திருத்தல் என்பதே கிறிஸ்தவர்கள் செய்யக்கூடிய - மற்றும் செய்திருந்த - ஒரே விஷயமாக இருந்தது. இயேசு, "… நீ என் நாமத்தை மறுதலியாமல், என் வசனத்தைக் கைக்கொண்டபடியினாலே … என் பொறுமையைக்குறித்துச் சொல்லிய வசனத்தை நீ காத்துக்கொண்டபடியினால்" என்று கூறினார். இயேசு தமது பூமிக்குரிய*

*ஊழியத்தின்போது, தமது சீஷர்களிடத்தில், ''ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான்'' என்று கூறினார் (யோவான் 14:23அ).*

*"என் வசனத்தைக் கைக்கொண்டபடியினாலே" என்ற சொற்றொடரும், "என் நாமத்தை மறுதலியாமல்" என்ற சொற்றொடரும் aorist வினைச்சொல்லாக உள்ளன, இது ஒருமுறை மாத்திரம் நடைபெறும் நிகழ்ச்சியை குறிக்கிறது. கடந்த காலத்தில் அவர்களின் விசுவாசம் கடுமையாகச் சோதிக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட வேளை இருந்திருந்தது - ஒருவேளை இது அந்திப்பா கொல்லப்பட்ட அதே வேளையாக இருந்திருக்கலாம் (2:13). இயேசுவை மறுதலித்து பேரரசரை அறிக்கையிடும்படியான அழுத்தம்/வலியுறுத்தம் இருந்த போதிலும், அவர்கள் விடாமுயற்சியுடன் இருந்தனர்.*

*அவர்களின் சொந்த "பலன்" என்பது "கொஞ்சமாக" இருந்தபோது, இதை அவர்களால் செய்ய முடிந்தது எவ்வாறு? பவுலைப்போல் அவர்கள் கர்த்தருடைய வல்லமையைச் சார்ந்திருக்கக் கற்றிருந்தனர் என்பது தெளிவு:*

> *அதற்கு அவர்: என் கிருபை உனக்குப்போதும். பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன். அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன். ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன் (2 கொரிந்தியர் 12:9, 10).[12]*

*பெரும் பள்ளத்தை கடக்க வைக்கும் பாலத்திற்கு நாம் நடந்து வந்தால், நான் "இந்தப் பள்ளத்தை கடப்பதற்கு எனது கால்கள் போதிய பலம் கொண்டுள்ளனவா?" என்று கேட்க மாட்டேன். அதற்குப் பதிலாக, "இந்தப் பாலத்தின்மீது நான் நடந்து செல்லுகையில் என்னைத் தாங்கும் அளவுக்கு இந்தப் பாலம் பலமாக உள்ளதா?" என்றே கேட்பேன். அதுபோலவே, வாழ்வின் சோதனைகளை நாம் எதிர்கொள்ளுகையில், "நாம் போதிய அளவு பலம் கொண்டிருக்கின்றோமா?" என்பது அல்ல, ஆனால் "நமது கர்த்தர் போதிய அளவு பலம் கொண்டிருக்கின்றாரா?'' என்பதே கேள்வியாக இருக்க வேண்டும். அந்தக் கேள்விக்கு பிலதெல்பியாவில் இருந்த சபையானது உரத்த குரலில் "ஆம்!" என்று பதில் அளித்திருந்தது.*

## *அவரது அளிப்பின் நிமித்தம் ஆறுதல் (3:8-10ஆ)*

*பிலதெல்பியாவில் இருந்த கிறிஸ்தவர்கள் விடாமுயற்சியுடன் இருந்தபடியால், அவர்களின் எதிர்காலமானது பேராச்சரியமான நிகழ்வுகளால் நிறைந்திருக்கும்.*

### *செயலாற்றல் பெருகிற்று*

*இயேசு அவர்களுக்கு விசேஷித்த வாய்ப்புகளைக் கொடுக்கத்*

தொடர்வார்: "இதோ, திறந்தவாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான்"[13] (வசனம் 8அ). புதிய ஏற்பாட்டில், திறந்தவாசல் என்ற உருவகம், விசேஷித்த வாய்ப்புக்களை, அதிலும் குறிப்பாக சுவிசேஷத்தைப் பரப்புவதற்கு விசேஷித்த வாய்ப்புக்களைக் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டது (நடபடிகள் 14:27; 1 கொரிந்தியர் 16:9; 2 கொரிந்தியர் 2:12; கொலோசெயர் 4:3).[14] பிலதெல்பியா நகரம் கிரேக்கக் கலாச்சாரத்தைப் பரப்புவதற்கென்று அட்டாலஸினால் நிலைநாட்டப்பட்டிருந்தாலும், அதை ஆசியா மைனரின் கிழக்கில் உள்ள நாடுகளில் சுவிசேஷத்தைப் பரப்புவதற்கென்று ஒரு ஊழிய மையமாகத் தேவன் பயன்படுத்துவார்.

கர்த்தர் நமது செயலாற்றலைப் பெருக்குகின்றார் என்பதே நம்மிடம் உள்ளவற்றை நம்மால் செய்ய முடிந்தவற்றைச் செய்யப் பயன்படுத்துவதற்கான எதிர்பாராப் பெருநிதியாக (serendipity)[15] உள்ளது. பயிற்சிக்கு உட்படுத்தப்பட்ட தசைகள் அதிக பலமுள்ளவையாகின்றன, அவைகளால் இன்னும் அதிகமானவற்றைச் செய்யமுடியும். இரண்டு தாலந்துகள் நான்காக முடியும் (மத்தேயு 25:17).

நிச்சயமாக, சபையானது இந்த வாய்ப்பைப் பயன்படுத்த வேண்டும். இயேசு கதவைத் திறந்து வைத்து, பிரவேசிக்கும்படி அழைக்கின்றார், ஆனால் அவர் நம்மை அதனூடே கடந்து செல்லும்படி கட்டாயப்படுத்துவதில்லை. பிலதெல்பியாவில் இருந்த கிறிஸ்தவர்கள், சூழ்நிலையை இன்னமும் அனுகூலப் படுத்திக்கொள்ள வேண்டியிருந்தது. அவர்கள் தங்களின் புதிய செயலாற்றலுடன் தங்களால் செய்ய முடிந்தவற்றைத் தொடர்ந்து செய்வார்கள் என்பதில் கர்த்தர் சிறிதளவே சந்தேகம் கொண்டிருந்தார் என்பது உறுதி.[16]

### விடாமுயற்சி நியாயப்படுத்தப்பட்டது

மீண்டுமாக இயேசு, தம்மில் அவர்கள் கொண்டுள்ள விசுவாசம் பற்றி அவர்கள் நியாயப்படுத்துவார்கள் என்று கூறினார்: "இதோ, யூதரல்லாதிருந்தும் தங்களை யூதரென்று பொய்சொல்லுகிறவர்களாகிய சாத்தானுடைய கூட்டத்தாரில் சிலரை உனக்குக் கொடுப்பேன், இதோ, அவர்கள் உன் பாதங்களுக்கு முன்பாக வந்து பணிந்து, நான் உன்மேல் அன்பாயிருக்கிறதை அறிந்துகொள்ளும்படி செய்வேன்" (வசனம் 9).

சிமிர்னாவில் இருந்த சபைக்கு எழுதப்பட்ட கடிதத்தை நாம் படித்தபோது, "சாத்தானுடைய கூட்டத்தார்" என்ற சொற்றொடர் நமக்கு அறிமுகப்படுத்தப்பட்டது (2:9). அந்தச் சொற்றொடர் ஒரு சாதாரண ஜெப ஆலயத்தை - இயேசுவை மேசியாவல்ல என்று புறக்கணித்திருந்த யூதர்களின் குழுவை - குறித்தது என்று நாம் குறிப்பிட்டிருந்தோம்.[17] அவர்கள் சாத்தானுடைய செயல்களைச் செய்துகொண்டிருந்தபடியால், "சாத்தானுடைய கூட்டத்தார்" என்று அழைக்கப்பட்டனர். கண்டனம் பண்ணப்படுதலைப் பெற்றிராத - சிமிர்னா மற்றும் பிலதெல்பியா ஆகிய இடங்களில் இருந்த - இரு சபைக்குழுமங்களும் வேறுசிலவற்றை (யும்) பொதுவானவைகளாகக் கொண்டிருந்தன என்றும் நாம் கவனித்திருந்தோம்: அவை இரண்டுமே

யூதர்களால் துன்புறுத்தப்பட்டிருந்தன.[18] அனேகமாக, ரோம அதிகாரிகள் கிறிஸ்தவர்கள் மீது அதிக அழுத்தத்தைச் செலுத்தும்படி அவர்களை ஊக்குவிப்பதற்கு, யூதர்கள் தங்களின் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தியிருக்கலாம்.

இயேசு, சிமிர்னாவுக்கு எழுதியபோது, அந்த சபைக்குழுமம், சாத்தானுடைய கூட்டத்தாரின் கொலைவெறிச் செயல்களிலும் உயிர்பிழைத்திருக்கும் என்று மறைமுகமாய்க் குறிப்பிட்டிருந்தார். பிலதெல்பியாவில் இருந்த சபைக்கு அவரது வாக்குத்தத்தமானது அதற்கும் அப்பால் சென்றது: "அவர்கள் [போலியான யூதர்கள்] உன் பாதங்களுக்கு முன்பாக வந்து பணிந்து,[19] நான் உன்மேல் அன்பாயிருக்கிறதை அறிந்துகொள்ளும்படி செய்வேன்." இது பிலதெல்பியாவில் கிறிஸ்தவர்கள் ஆகிக்கொண்டிருந்த யூதர்களைக் குறிக்கிறது என்று சிலர் நம்புகின்றனர்;[20] இது அந்த சபைக்குழுமத்திற்குக் கொடுக்கப்பட்டிருந்த "திறந்தவாசலின்" ஒருபகுதியாக இருந்தது என்று அவர்கள் நினைக்கின்றனர். மற்றவர்கள், இந்த வாக்குத்தத்தமானது, கிறிஸ்தவர்களும் தேவனுடைய விசேஷித்த மக்களாக இருந்தனர் என்பதை மனந்திரும்பாத யூதர்கள் எரிச்சலுடன் ஒப்புக்கொள்ளுதலைக் குறிக்கும் என்று கருத்துத் தெரிவிக்கின்றனர். இந்த வார்த்தை வேறு எதை அர்த்தப்படுத்தினாலும், அவிசுவாசிகள் யாவரும், இயேசுவே தேவனுடைய குமாரன் என்று (ஆகையால் அவரைப் பின்பற்றுபவர்கள் சரியானவர்களே என்றும்) ஒப்புக்கொள்ளும் நாள் வரும் என்று வேதாகமம் தெளிவாகப் போதிக்கிறது:

> … முழங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்கும், … என்று என்ஜீவனைக்கொண்டு உரைக்கிறேன் என்பதாய்க் கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறது (ரோமர் 14:11).
>
> இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும், … (பிலிப்பியர் 2:10, 11).

### பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டது

இயேசு, பிலதெல்பியா சபைக்குத் தமது தொடர்ந்த பாதுகாப்பை உறுதிப்படுத்தினார்: "என் பொறுமையைக்குறித்துச் சொல்லிய வசனத்தை நீ காத்துக்கொண்டபடியினால், பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாகப் பூச்சக்கரத்தின்மேலெங்கும் வரப்போகிற சோதனை காலத்திற்குத் தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன்" (வசனம் 10). அவர்கள் கடந்த காலத்தில் துன்புறுத்தப்பட்டிருந்தனர், மிகவும் மோசமான சோதனைகள் அவர்களுக்காகக் காத்திருந்தன, ஆனால் இயேசு அவர்களுடன் இருப்பார். அவரது வார்த்தை விளையாட்டைக் கவனியுங்கள்: அவர்கள் அவரது வசனத்தைக் காத்துக்கொண்டபடியினால், அவர்களை அவர் காப்பார்.

"சோதனைகாலம்" என்ற சொற்றொடர், உடனடியாக எதிர்காலத்தில்

அதிகரிக்கப்படவிருந்த துன்புறுத்துதலைக் குறித்தது.[21] 6 முதல் 19 வரையில் உள்ள அதிகாரங்கள், சோதனையின் அந்தப் பயங்கரமான வேளையைப் பற்றிக் கூறுவதற்குப் பல்வேறு வகையான உருவகங்களைப் பயன்படுத்து கின்றன. இந்த "சோதனைகாலம்" என்பது கிறிஸ்தவர்கள் மீது மாத்திரமின்றி "பூச்சக்கரத்தின்மேலெங்கும்"[22] வரவிருந்தது, மற்றும் இது, "பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாக" என்ற ஒரே நோக்கத்தைக் கொண்டிருந்தது. வெளிப்படுத்தின விசேஷத்தில், பூமியில் குடியிருக்கிற வர்கள் என்ற கருத்து அவிசுவாசிகளைக் குறிப்பதாக உள்ளது (6:10; 8:13; 11:10; 13:8, 14; 17:8). இந்த வசனப்பகுதியானது, பூமியின்மீது தேவன் இடர்ப்பாடுகளை அனுமதிக்கும்போது, அது மக்களை மனந்திரும்பு தலுக்குக்[23] கொண்டுவருதல் என்ற ஒரு நோக்கம்[24] கொண்டுள்ளது என்று நம்மை அறிய அனுமதிக்கிறது. வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தை நாம் தொடர்ந்து படிக்கையில் இதைச் சிந்தையில் வைத்துக் கொள்ளுங்கள்; இது, இந்தப் புத்தகத்தில் விவரிக்கப்பட்டுள்ள பயங்கரம் நிறைந்த பேரழிவுகளில் தேவன் எதை நிறைவேற்ற முயற்சி செய்துகொண்டிருந்தார் என்பதைப் புரிந்து கொள்வதற்கான திறவுகோல் குறிப்பாக உள்ளது.

இயேசு, "சோதனை காலத்திற்கு" கிறிஸ்தவர்கள் தப்பும்படி செய்வார் (அவர்களைக் காவல்காத்து பாதுகாப்பார்) என்பதே வசனம் 10ல் அவரது முக்கிய கருத்தாக உள்ளது. "(காலத்)திற்கு" என்பது "இருந்து" என்று அர்த்தப்படுகிற *ek* என்ற கிரேக்க முன்னிடைச் சொல்லின் மொழிபெயர்ப் பாக உள்ளது. இந்த முன்னிடைச் சொல்லானது "... ல் இருந்து தொற்றாப் பாதுகாப்பு, அல்லது ... பாதுகாப்பாகக் கொண்டுவரப்படுதல்" என்பதைக் குறிப்பிடக்கூடும்.[25] 2:10ல் இது "... ல் இருந்து தொற்றாப் பாதுகாப்பு என்பதை" அர்த்தப்படுத்துகிறதா? கிறிஸ்தவர்கள் யுத்தம், பஞ்சம் மற்றும் கொள்ளை நோய் ஆகியவற்றினால் பாதிக்கப்படாது இருக்கும்படி அவர்களுக்கு இயேசு அற்புதவிதமாகத் தடுப்பு ஏற்பாடுகளைச் செய்வித்தாரா? அவர் தம் மக்களைச் சுற்றி, பட்டயங்கள், அம்புகள் மற்றும் கோடரிகள் ஆகியவற்றினால் துளைக்க முடியாத தடைச்சுவர்களை ஏற்படுத்தினாரா? அவர் தமது மக்களை அக்கினி மற்றும் ஏவுகணைகளால் தாக்க இயலாதவர்கள் ஆக்கினாரா? அவர் இவ்வாறெல்லாம் செய்யவில்லை என்று நீங்கள் அறிந்திருக்கின்றீர்கள். சோதனை காலம் முடியும் முன்பு கிறிஸ்தவர்கள் பலர் இறந்து போவார்கள் (6:9; 17:6ஐக் காணவும்). ஆகையால் இயேசு அவர்களை சோதனையினூடே "பாதுகாப்பாக வழி நடத்துவார்" என்பதே அவரது வாக்குத்தத்தின் அர்த்தமாக இருக்க வேண்டும்.[26]

கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நமக்கு, சோதனையிலிருந்து விடுதலை என்பது வாக்குத்தத்தம் செய்யப்படவில்லை, ஆனார் உயிர்பிழைத்திருப் பதற்கான ஆவிக்குரிய ஆதாரமூலங்கள் நமக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்டுள்ளன (2 கொரிந்தியர் 12:9; 2 தீமோத்தேயு 3:12; 4:18; எபிரெயர் 4:16). புதிய எண்ணப்போக்கு[27] - எது முக்கியம் எது முக்கிய மற்றது என்பது பற்றி மாற்றப்பட்ட கண்ணோக்கக் கருத்து - என்பதே இயேசுவின் அளிப்பில் உள்ள ஒரு திறவுகோல் காரணியாக இருக்கிறது.[28] அந்த எண்ணப்போக்கு, இரக்கமற்ற வகையில் துன்புறுத்தப்பட்ட பவுல்

*மற்றும் பிறரினால் சான்றுடன் விளக்கப்பட்டது:*

> *ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்து போகிறதில்லை. எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது (2 கொரிந்தியர் 4:16).*
>
> *... நாம் தைரியங்கொண்டு: கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்னசெய்வான் என்று சொல்லலாமே (எபிரெயர் 13:6).*
>
> *கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம் (பிலிப்பியர் 1:21).*

*பிலதெல்பியாவில் இருந்த கிறிஸ்தவர்களுக்குச் சோதனைகள் வரும்போது இயேசு அவர்களைக் கைவிடுவதில்லை என்று அவர்களுக்கு வாக்குத்தத்தம் செய்தார். அவர் நம்மையும் கைவிடமாட்டார் (எபிரெயர் 13:5).*

## *அவரது உணர்ந்தறிதல் நிமித்தம் ஆறுதல் (3:11)*

*கர்த்தருடைய அளித்தல் என்பது சபையின் உண்மைத் தன்மையைச் சார்ந்திருக்கும். அவர்கள் பலத்துடன் நிலைத்திருப்பதற்கு அவர்களுக்கு அவசியமானது எது என்பதை இயேசு அறிந்தார்.*

### *அவரது பிரசன்னம் உத்தரவாதப்படுத்தப்பட்டது*

*இந்தக் கிறிஸ்தவர்களுக்கு இயேசுவின் பிரசன்னம் உறுதிப்படுத்தப் படுதல் அவசியமாய் இருந்தது, எனவே அவர் - அவர்களைப் பாதுகாப் பதற்கும் அவர்களின் விரோதிகளைத் தண்டிப்பதற்கும் - ‘‘இதோ, சீக்கிரமாய் வருகிறேன்’’[29] என்று கூறினார் (வசனம் 11அ).*

### *அவர்களின் பொறுமை அவசியமாய் இருந்தது*

*அவர்கள் (தங்கள் விசுவாசத்தை) விட்டுவிடாதிருக்கும்படி உற்சாகப் படுத்தப்படுதலும் அவசியமாயிருந்தது, எனவே அவர்களிடத்தில் அவர், “ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு”[30] என்று வற்புறுத்தினார் (வசனம் 11ஆ). “கிரீடம்” என்று இவ்விடத்தில் உள்ளது, 2:10ல் குறிப்பிடப்பட்ட - stephanos - என்ற அதே வார்த்தையாகவே உள்ளது, இது வெற்றியின் கிரீடம் என்று அர்த்தப்படுகிறது. உண்மையுள்ள கிறிஸ்தவர் ஒவ்வொருவருக்காகவும் பரலோகத்தில் ஒரு கிரீடம் வைக்கப்பட்டுள்ளது (2 தீமோத்தேயு 4:8), ஆனால் அந்தக் கிரீடம் இழந்துபோகப்பட(வும்)கூடும். அதைத் தவிர்ப்பதற்கு, பிலதெல்பியாவில் இருந்த கிறிஸ்தவர்கள் தங்களுக்குள்ள வைகளைப் பற்றிக்கொண்டிருக்க வேண்டியிருந்தது.*

*இந்தக் கிறிஸ்தவர்கள் தங்களுக்கென்று கொஞ்சமானவைகளையே கொண்டிருந்தனர் - ஆனால், முக்கியமானவற்றைப் பொறுத்தமட்டில்*

இவர்கள் அதிகமானவைகளைக் கொண்டிருந்தனர்: இவர்கள், இரட்சிப்பு, வசனம், கர்த்தரில் இவர்களின் விசுவாசம், தேவன் இவர்களுக்குக் கொடுத்திருந்த கொஞ்சம் பெலன், புதிய வாய்ப்புகள், மற்றும் இயேசுவின் வாக்குத்தத்தங்கள் ஆகியவற்றைக் கொண்டிருந்தனர். இவர்கள் தங்களுக்குத் தேவன் கொடுத்திருந்தவைகள் ஒருக்காலும், ஒருக்காலும் தங்களைவிட்டுப் போகும்படி அனுமதிக்காமல் உறுதியாய்ப் பற்றிக் கொண்டிருக்க வேண்டியதாக இருந்தது. கிறிஸ்தவர்களின் ஒரு குழுவிற்குப் பவுல், "நான் உங்களுக்குப் பிரசங்கித்தபிரகாரமாய், நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால்,[31] ..." (1 கொரிந்தியர் 15:2ஆ) சுவிசேஷத்தினால் இரட்சிக்கப்படுவார்கள் என்று கூறியிருந்தார்.

## அவரது வாக்குத்தத்தங்களின் நிமித்தம் ஆறுதல் (3:12)

கடிதத்தின் இந்தப் பகுதி வரையிலும் இயேசுவின் வாக்குத்தத்தங்கள், உண்மையுள்ளவர்களுக்கு அவர் இந்த வாழ்வில் என்ன செய்வார் என்பதையே முக்கியமாக மையங்கொண்டிருந்தன. அவர் இதை முடிப்பதற்கு முன்பு, அவர்களுக்கு இனிவரவிருக்கும் வாழ்வில் வைக்கப் பட்டுள்ளவைகள் என்ன என்பதை அவர்கள் அறிய வேண்டும் என்று விரும்பினார்:

> ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனை என் தேவனுடைய ஆலயத்திலே[32] தூணாக்குவேன், அதினின்று அவன் ஒருக்காலும் நீங்குவதில்லை, என் தேவனுடைய நாமத்தையும் என் தேவனால் பரலோகத்திலிருந்திறங்கிவருகிற புதிய எருசலேமாகிய என் தேவனுடைய நகரத்தின் நாமத்தையும், என் புதிய நாமத்தையும் அவன்மேல் எழுதுவேன் (வசனம் 12).

### முதன்மைச் சிறப்பு

"தூண்" என்பதற்கான இயேசுவின் குறிப்பில் உள்ள அடிப்படை மறைமுகக் கருத்தை நாம் புரிந்துகொள்கின்றோம். சில கட்டிடங்களில் தூண்கள் உள்ளன, மற்றும் இப்போதும்கூட நாம், "இடர்ப்பாட்டின்போது, அவர் பலத்தின் தூணாக இருந்தார்" அல்லது "அவர் சமுதாயத்தில் ஒரு தூணாக இருக்கின்றார்" என்பது போன்ற சொல்விளக்கங்களைப் பயன்படுத்துகின்றோம். நாம், "தூண்" என்ற உருவகத்தைப் பயன் படுத்தும்போது, தாங்கி நிற்கின்ற மற்றும் நிலைநிறுத்துகின்ற சிலவற்றை (1 தீமோத்தேயு 3:15ஐக் காணவும்) அல்லது முதன்மைச் சிறப்புவாய்ந்த ஒருவரை (கலாத்தியர் 2:9ஐக் காணவும்) குறிப்பிடுகின்றோம்.

புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில், "ஒரு தூண்" என்ற கருத்து கூடுதலான சொல்லர்த்தங்களைக் கொண்டிருந்தது. சிலவேளைகளில், தனிநபர்களைக் கனப்படுத்துவதற்குத் தூண்கள் எழுப்பி நிறுத்தப்பட்டன: அந்தத் தூண்களில் கனப்படுத்தப்பட வேண்டியவர்களின் பெயர்களும்

தகவல்களும் செதுக்கப்பட்டன.[33] இன்றைய நாட்களில், பழைய பிலதெல்பியா இருந்த இடமானது பழைய தியத்தீரா இருந்த இடத்தைப் போன்றதாகவே உள்ளது: அதே இடத்தில் நவீன நாட்களின் கிராமம்[34] ஒன்று கட்டியெழுப்பப்பட்டுள்ளதால், சிறிதளவே அகழ்வாய்வு சாத்தியமாகியுள்ளது. நகரத்தின் மையமாக இருந்த ஒரே ஒரு பகுதி மாத்திரம் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளது,[35] ஆனால் அந்தக் காட்சித் தோற்றத்தின் ஒரு பண்பு நமது படிப்பிற்கு ஆர்வம் ஊட்டுவதாக உள்ளது. அந்த இடத்தில் வீரர்களின் பெயர்கள் செதுக்கப்பட்ட பழங்காலத்தின் தூண்கள் பல நின்ற நிலையில் நிலைத்துள்ளன.

இயேசு, "அவனை என் தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவேன்" என்று கூறியபோது, இவை யாவற்றையும் - இன்னும் அதிகமானவற்றையும் - தமது சிந்தையில் கொண்டிருக்க வேண்டும். இந்த வாழ்வில் பிலதெல் பியாவில் இருந்த கிறிஸ்தவர்கள் பலவீனர்களாகக் கருதப்பட்டிருக்கலாம், ஆனால் அவர்களை இயேசு "பலத்தின் தூண்கள்" ஆக்குவார்.

### நிரந்தரத் தன்மை

நிரந்தரமான குடியிருப்பு என்பது ஒரு முக்கியமான உய்த்துணர்தலாக உள்ளது; ஏனெனில் இயேசு, "அதினின்று அவன் ஒருக்காலும் நீங்குவதில்லை"[36] என்று வலியுறுத்தினார். பிலதெல்பியாவில் இருந்த குடிகள் நொறுங்கி விழும் கட்டிடங்களினால் நசுக்கப்பட்டு விடாதபடிக்கு, அடிக்கடி அந்த நகரத்தில் இருந்து வெளியே ஓடினர், ஆனால் பரலோகத்தில், கர்த்தருடைய தூண்கள் நிரந்தரமாய் நிலைத்திருப்பவைகளாக இருக்கும்! நாம் பரலோகத்திற்குச் செல்லும்போது, சோதனை காலம் முடிந்திருக்கும். முடிவற்ற காலத்திற்கு நமது தங்குமிடம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது! சங்கீதக்காரரின் ஊக்கமான விருப்பம் கடைசியில் உணர்ந்தறியப்படும்:

> கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன், நான் கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும்படியாகவும், அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சிசெய்யும்படியாகவும், நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன் (சங்கீதம் 27:4).

அகஸ்டீன் என்பவர், "எந்த நண்பரும் விட்டுப்பிரியாத, எந்த விரோதியும் உள்நுழையாத அந்த நகரத்திற்காக ஏங்கியிராதவர்கள் ... யார்?" என்று எழுதினார்.[37]

### உடைமை/உரித்தாக்கியிருத்தல்

ஒவ்வொரு தூணின்மீதும் இயேசு, "என் தேவனுடைய நாமத்தையும் என் தேவனால் பரலோகத்திலிருந்திறங்கிவருகிற புதிய எருசலேமாகிய என் தேவனுடைய நகரத்தின் நாமத்தையும், என் புதிய நாமத்தையும் ... எழுதுவேன்" என்று வாக்குத்தத்தம் செய்தார். இந்தப் பெயர்கள், தூண்களை உயர்த்துகின்றன மற்றும் இவைகள் தெய்வீகத்துடனான ஒரு

உறவுமுறையைச் சுட்டிக்காண்பிக்கின்றன.[38]

தேவன் நமது பிதாவாக இருப்பதால், அவர் நமது கண்களில் இருந்து கண்ணீர் யாவையும் துடைப்பதால், அவரது நாமம் நம்மீது செதுக்கப்படும் (7:17; 21:4).

''தேவனிடத்தினின்று பரலோகத்தைவிட்டு இறங்கி வரும் புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரம்'' என்பது நமது பரலோக குடியிருப்புக்கு இன்னொரு பெயராக உள்ளது (21:2, 10ஐக் காணவும்).[39] (''புதிய எருசலேம்'' என்ற விளக்க படத்தைக் காணவும்.) பழைய எருசலேம் நகரம், ஏறக்குறைய இருபது ஆண்டுகளுக்கு முற்பட்ட காலமான, கி.பி. 70ல் ரோமர்களால் அழிக்கப்பட்டிருந்தது, ஆனால் கிறிஸ்தவர்கள், ''மேலான எருசலேமை'' (கலாத்தியர் 4:26; எபிரெயர் 12:22ஐக் காணவும்) எதிர்நோக்கியிருக்க முடியும், அது ''தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகர''மாக இருந்தது (எபிரெயர் 11:10).[40] ''புதிய எருசலேம்'' என்ற பெயரானது நமது நிரந்தரமான முகவரியாக இருப்பதால், அது நம்மை அழகுபடுத்துவதாக இருக்கும்.

அத்துடன் கூடுதலாக, ஒரு மணமகன் தனது பெயரைத் தனது மணமகளுக்கு கொடுத்து கனப்படுத்துவதுபோல, இயேசுவின் ''புதிய பெயரையும்''[41] நாம் பெற்றுக்கொள்வோம். கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம் கிறிஸ்துவின் மணவாட்டியாகிய சபையின் அங்கமாக இருக்கின்றோம் (எபேசியர் 5:23-33). ஒரு நாளிலே அவர் தம்மிடத்தில் நம்மைச் சேர்த்துக் கொள்ளும்படிக்குத் தோன்றுவார். பின்பு, ''அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போம்'' (1 யோவான் 3:2ஆ).

## முடிவுரை

''ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்'' (வசனம் 13).

இந்தக் கடிதம் எனக்குத் தனிப்பட்ட முறையில் மதிப்புமிக்க செய்திகளைக் கொண்டுள்ளது. இதன் வார்த்தைகள் எனக்கு அறைகூவல் விடுக்கின்றன. தேவனால் தரப்பட்ட வாய்ப்புக்களை நான் இன்னும் அதிக கவனமாகக் கண்ணோக்கி, அவற்றின் அனுகூலங்களை எடுத்துக்கொண் டாக வேண்டும். அவரது வசனத்திற்குக் கீழ்ப்படிவதற்கும், அவரை ஒருக்காலும் மறுதலியாது இருப்பதற்குமான எனது உறுதிப்பாட்டை நான் புதுப்பிக்க வேண்டும். எனது கிரீடத்தை நான் இழந்து போகாதபடிக்கு, தேவன் எனது பராமரிப்பில் ஒப்புவித்துள்ள எல்லாவற்றின் மீதான பிடியை நான் பலப்படுத்த வேண்டும். விசேஷமாக இந்தக் கடிதம், என்னை ஊக்குவிக்கிறது. நான் பலவீனமுள்ளவனாக இருக்கும் வேளையிலும், ஒரு நாளில் நான் பலம் மற்றும் நிலைப்புத் தன்மையின் தூணாக விளங்க முடியும்.

நாம் யாவரும் ''கட்டுமானத்தின் கீழ் உள்ளார்'' என்ற ஒரு அடையாளக்குறியை அணிய வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. ''என்னில் அவர் இன்னும் கிரியை செய்கின்றார்'' என்ற பாடலின் உணர்வை நான்

*விரும்புகின்றேன். அவருடன் நான் நெருங்கியிருந்து மனக்கலக்கம் அடையாதிருந்தால், அவர் இன்னும் என்னில் சிலவற்றைச் செய்யக்கூடிய வராக இருக்கின்றார்!*[42]

---

## போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் ஆகியோருக்கான குறிப்புகள்

*இந்தப் பாடத்திற்கு பிரசங்கியார்கள் பெரும்பாலும், "திறந்த வாசலைக் கொண்டிருந்த சபை'' (அல்லது ''திறந்த வாசல்'' என்று மாத்திரம்) தலைப்பிடுகின்றனர் மற்றும், வாய்ப்புக்களை, அதிலும் விசேஷமாக, சுவிசேஷ ஊழியத்திற்கான வாய்ப்புக்களை அனுகூலப்படுத்திக் கொள்ளுதல் பற்றி வலியுறுத்துகின்றனர். இந்தப் படிப்பு, ஒருவர் மற்றவரை அன்புகூருதலின் அவசியம் பற்றி அதிகமான வலியுறுத்துதலுடன் (யோவான் 13:34; ரோமர் 5:5; 1 தெசலோனிக்கேயர் 4:9; 1 யோவான் 4:19) ''சகோதரத்துவ அன்பின் சபை'' என்றும் அழைக்கப்பட முடியும்: ஆவிக்குரிய வகையில் பேசுவதென்றால், நாம் யாவரும், சகோதரத்துவ அன்பின் நகரமாகிய பிலதெல்பியாவில் வாழ வேண்டும்.*

---

**குறிப்புகள்**

[1]*இந்தப் புத்தகத்தில் உள்ள "ஆசியாவின் ஏழு சபைகளும் பத்மு தீவும்" என்ற வரைபடத்தைக் காணவும்.* [2]*அமெரிக்க நாட்டில், பென்சில்வேனியா மாகாணத்தில் பிலதெல்பியா என்ற பெயரில் நாங்கள் ஒரு நகரத்தைக் கொண்டுள்ளோம், "சகோதரத்துவ அன்பின் நகரம்" என்பதே இதன் குறிக்கோளாக உள்ளது.* [3]*இந்தப் பகுதி முழுவதும் பூமியதிர்ச்சிக்கு உட்படக்கூடியதாக இருக்கிறது. பயணவழிகாட்டியானவர் எனது பயணக்குழுவிற்கு நகரத்தின் சிதிலங்களைக் காண்பித்தபோது பெரும்பாலும், பூமியதிர்ச்சி அந்த நகரத்தை அழித்த தேதியைக் குறிப்பிடுவார்.* [4]Homer Hailey, *Revelation*: *An Introduction and Commentary* (Grand Rapids, Mich.: Baker Book House, 1979), 149. [5]*இந்த சபைக்குழுமம் எப்போது நிலைநாட்டப்பட்டது என்பதை நாம் அறிவதில்லை; இது ஒருவேளை எபேசுவில் பவுலின் ஊழியத்தின்போது நிலைநாட்டப்பட்டிருக்கலாம் (நடபடிகள் 19:1, 8-10).* [6]*"திறத்தல்" மற்றும் "பூட்டுதல்" என்ற இரண்டுமே நிகழ்கால வினைச் சொற்களாக உள்ளன, இது தொடர்ந்து நடைபெறும் செயலைக் குறிக்கிறது. கர்த்தர் தமது சபையின் வாழ்வில் தொடர்ந்து ஈடுபாடு கொண்டுள்ளார்.* [7]*" 'தாவீதின் திறவுகோல்' என்பது நம்மை, ஏசாயா 22:22ஐ நோக்கிப் பின்னாக எடுத்துச் செல்லுகிறது. அங்கு எசேக்கியா என்ற நல்ல அரசரின் உண்மையுள்ள உக்கிராணக்காரரான எலியாக்கீம் 'தாவீதுடைய வீட்டின் திறவுகோலை' கொண்டிருந்ததாகவும் அவர் மாத்திரமே அரசருடைய சமூகத்தில் வேண்டுதல்களை அனுமதிக்க உரிமை கொண்டிருந்ததாகவும் குறிப்பிடப்பட்டார் … அவர் மூலமாகவே ஒருவர் அரசரிடத்தில் சென்று சேர முடியும், ஏனெனில் அவர்மாத்திரமே அரசரின் சமூகத்திற்கு வழிதரும் கதவை மூடவும் திறக்கவும் உரிமை கொண்டிருந்தார்"* (Rubel

Shelly, *The Lamb and His Enemies: Understanding the Book of Revelation* [Nashville: 20th Century Christian Foundation, 1983], 41). [8]*இயேசு, ''பின்வரும் எல்லா வட்டாரங்களிலும் அதிகாரம் உள்ளவராய் இருக்கின்றார்: வானத்திலும் பூமியிலும் (மத்தேயு 28:18), தேவதூதர்கள், அதிகாரங்கள் மற்றும் வல்லமைகள் மீது (1 பேதுரு 3:22), சபையின்மீது (எபேசியர் 1:20-22), பூமியின் அரசர்கள் மீது (வெளிப்படுத்தின விசேஷம் 1:5), மற்றும் மரணம், பாதாளம் ஆகியவற்றின் மீது (வெளிப்படுத்தின விசேஷம் 1:18)''* (Hailey, *150).* [9]*குறிப்பிட்ட ஒரு நபர் மீட்கப்படுவாரா அல்லது இழந்துபோகப்படுவாரா என்பது பற்றி நான் என்ன நினைக்கின்றேன் என்று அவ்வப்போது யாரேனும் ஒருவர் என்னிடத்தில் கேட்கின்றார். அனுமதிக்கவோ அல்லது அனுமதியை மறுக்கவோ இயேசு ஒருவர் மாத்திரமே உரிமை கொண்டுள்ளார் என்று நான் கூறுவதுண்டு; அவைகள் என்னுடைய முடிவுகள் அல்ல, ஆனால் அவருடைய முடிவுகளாகவே உள்ளன (மற்றும் இது இவ்வாறு இருப்பதற்காக நான் அவருக்கு நன்றிசெலுத்துகின்றேன்). நான் தேவனல்ல என்பதை நான் வலியுறுத்துகின்றேன்; நான் ஒரு பிரசங்கியாராக மாத்திரமே இருக்கின்றேன், வசனத்தைப் பிரசங்கித்தல் மாத்திரமே எனது பணிப்பொறுப்பாக உள்ளது. பொதுவாக நான் பின்வரும் புத்திமதியுடன் முடித்துக்கொள்வதுண்டு: 'யாரேனும் ஒரு மனிதரைப் பற்றிய கருத்தைக் கேட்பதற்குப்' பதிலாக, நீங்கள் "இரட்சிப்பின் விஷயம் பற்றி வேதாகமம் போதிப்பது என்ன?" என்று கேட்க வேண்டும்.* [10]*"எனது பொறுமையின் வசனம்" என்பது வழக்கத்திற்கு மாறான ஒரு சொல்விளக்கமாக உள்ளது, இது அனேகமாக, "எனது பொறுமையைப் பற்றிக் கூறுகிற வசனம்" என்று அர்த்தப்படலாம். உறுதியுடன் நிலைத்திருத்தல் பற்றிய விஷயத்தில், இயேசு நமக்கு உதாரணத்தை விட்டுச் சென்றுள்ளார் (எபிரெயர் 12:2, 3). அவர் பொறுமையைப் பற்றிப் போதித்ததுடன் (மத்தேயு 24:13), அதை நடைமுறைப்படுத்தியும் இருந்தார்.*

[11]Alfred Plummer, *"The Revelation of St. John the Divine,"* in The Pulpit Commentary, vol. 22, *Epistles of Peter, John & Jude, The Revelation,* ed. H. D. M. Spence and Joseph S. Exell (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1950), 111. [12]*ஏசாயா 40:29; எபிரெயர் 11:34 ஆகிய வசனங்களைக் காணவும்.* [13]*''ஒருவரும் பூட்டக்கூடாதபடிக்கு'' என்ற சொற்றொடர், சிலர் கதவைப் பூட்ட முயற்சி செய்வார்கள் என்று மறைமுகமாய் உணர்த்துகிறது. 1 கொரிந்தியர் 16:9ல் பவுல், "ஏனெனில் இங்கே பெரிதும் அநுகூலமுமான கதவு எனக்குத் திறக்கப்பட்டிருக்கிறது. விரோதஞ்செய்கிறவர்களும் அநேகர் இருக்கிறார்கள்" என்று கூறினார். சுவிசேஷ ஊழியத்தைச் சாத்தான் ஒருக்காலும் சுலபமாயிருக்கும்படி அனுமதிப்பதில்லை. கதவு திறந்திருக்கும் போது, ஈக்களும் தொல்லைப்படுத்துகிற மற்ற பூச்சிகளும் உள்ளே நுழைகின்றன! என்று யாரோ ஒருவர் சுட்டிக்காண்பித்தார்.* [14]*"திறந்த வாசல்" என்பதன் சாத்தியக்கூறுள்ள மற்ற அர்த்தங்கள் கருத்தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன, இதில் பொது ஊழியத்தின் திறந்த கதவுகளும் வளர்ச்சியின் திறந்த கதவுகளும் உள்ளடங்கும். அத்துடன் கூடுதலாக, நித்திய ஆசீர்வாதத்திற்கான (2 பேதுரு 1:10, 11) "திறந்த கதவு" என்பதை அல்லது வெளிப்படுத்துதலுக்கான (வெளிப்படுத்தின விசேஷம் 4:1) ''திறந்த கதவு'' என்பதையும், இயேசு தமது சிந்தையில் கொண்டிருக்கலாம் என்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.* [15]Serendipity *என்பது ஒரு சாதனையின் மூலம் கிடைக்கக் கூடிய எதிர்பாராத பலனாக உள்ளது.* [16]*நாம் அனுகூலப்படுத்திக்கொள்ள இயலாத திறந்த வாசலைக் கர்த்தர் ஒருக்காலும் நமக்குக் கொடுப்பதில்லை. ''கர்த்தர் கட்டளையிடுகின்றபோது, அதை நிறைவேற்றுவதற்கான பலத்தையும் அளிக்கின்றார்'' என்று யாரோ ஒருவர் கூறியுள்ளார்.* [17]*இயேசுவை ஏற்றுக்கொண்டவர்களே "உண்மையான" யூதர்கள் என்று பவுல் வலியுறுத்தியிருந்தார் (ரோமர் 2:28, 29).* [18]*கி.பி. 70ல் எருசலேமின்*

அழிவிற்குப் பின்பு, ஜெப ஆலயங்களில் கிறிஸ்தவர்களுக்கு எதிரான ஆழ்ந்த வெறுப்பு முடுக்கிவிடப்பட்டது. [19]KJV வேதாகமத்தில் "Worship" என்ற வார்த்தை உள்ளது, ஏனென்றால் இவ்விடத்தில் மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையானது "ஆராதனை" என்பதற்குரிய பொதுவான வார்த்தையாக உள்ளது. ASV வேதாகமத்திலும் ''Worship'' என்றே உள்ளது, ஆனால் இது பின்வரும் அடிக்குறிப்பைச் சேர்த்துள்ளது: "The Greek word denotes an act of reverence, whether paid *to a creature,* or to the Creator." ["இவ்விடத்தின் கிரேக்க வார்த்தையானது படைக்கப்பட்டவற்றிற்கோ அல்லது படைத்தவருக்கோ காண்பிக்கிற பயபக்தியைக் குறிப்பிடுகிறது'']. புறஜாதியார் ஒருநாளிலே யூதர்களுக்கு முன்பாகப் பணிந்துகொண்டு அவர்கள் உண்மையான தேவனை ஆராதிப்பதை ஒப்புக்கொள்வார்கள் என்பது பற்றி ஏசாயா பேசினார் (ஏசாயா 49:23; 60:3, 14). இந்த வாக்குத்தத்தத்தை ஒரு திரிபுநிலையாக இயேசு கொடுத்தார்: இப்போது யூதர்கள் அந்த ஒப்புக்கொள்ளுதலைச் செய்வார்கள். [20]கடிதத்தின் தொடக்கத்தில் இயேசுவைப் பற்றிய விவரிப்பு மேசியாத்துவப் பண்புகளை வலியுறுத்திற்று என்று அவர்கள் சுட்டிக்காண்பிக்கின்றார். மேலும் அவர்கள், வெளிப்படுத்தின விசேஷம் எழுதப்பட்டு இருபது ஆண்டுகளுக்குப் பின்பு, பிலதெல்பியாவில் இருந்து மற்றும் அந்த நகரத்தில் இருந்த சபைக்கு எழுதப்பட்ட கடிதத்தொடர்புகள், அந்த சபைக்குழுமம் யூதத்துவப் போதகர்களினால் பாதிக்கப்பட்டிருந்ததைச் சுட்டிக்காண்பித்தன - இவற்றில் யூதர்கள் சிலர் கிறிஸ்தவர்களானது பற்றியும் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிடுகின்றனர். இவ்வாறு சிந்திப்பவர்கள், "பாதிக்கப்பட்டவர்களும் வெற்றியாளர்களும் வெற்றியை ஒருசேரப் பகிர்ந்து கொள்கின்றனர்" என்பது பற்றிப் பேசுகின்றனர்.

[21]ஆயிரம் ஆண்டு முன்னரசாட்சிக் கொள்கைக்காரர்களில் பலர், "சோதனை காலம்'' என்பது, இயேசுவின் ஆயிரம் ஆண்டு அரசாட்சி தொடங்குவதற்கு முன்னதாக பூமியில் ஏற்படவிருக்கும் ஏழு ஆண்டுகள் உபத்திரவத்தைக் குறிக்கிறது என்று போதிக்கின்றனர். ("வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் உள்ள "பல ஆயிரமாண்டு முன் அரசாட்சிக் கொள்ளைக்காரர்களால் முன்மொழியப்பட்ட வெளிப்படுத்தின விசேஷத்தின் புறக்குறிப்பு'' என்ற வரைவட்டவணையைக் காணவும்.) இருப்பினும், இந்த "சோதனை காலம்" என்பது "பூச்சக்கரம் எங்கும் வரவிருந்தது" [ஆங்கிலத்தில், "*about to come* upon the whole world" என்றுள்ளது; இது ''விரைவில் வரவிருந்த'' என்று அர்த்தப்படுகிறது] என்பதைக் கவனியுங்கள். பத்தொன்பது நூற்றாண்டுகளுக்கும் அப்பால் ஏற்படவிருக்கும் ஒரு உபத்திரவத்தைப் பற்றியல்ல, ஆனால் உடனடியான எதிர்காலத்தின் பிரச்சனைகளைப் பற்றியே பேசினார். [22]இது முழு உலகத்தையும், மக்கள் இருந்த முழு உலகத்தையும் அல்லது ரோமப் பேரரசைக் குறிப்பதாக இருக்கலாம். வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் ரோமப்பேரரசுதான் அடிப்படை அக்கறைக்குரிய விஷயமாக இருந்தது. [23]துன்பம் வந்தபோது மனிதர்கள் மனந்திரும்பவில்லை என்ற உண்மையின் மீதுள்ள வலியுறுத்தத்தைக் கவனியுங்கள் (9:20, 21; 16:9, 11). இது, அவர்கள் மனந்திரும்ப வேண்டும் என்பது தேவனுடைய விருப்பமாக இருந்தது என்று சுட்டிக்காண்பிக்கிறது (2 பேதுரு 3:9ஐக் காணவும்). [24]சோதிக்கப்படுபவர்களின் உண்மை இயல்பை வெளிப்படுத்துதல் என்பது சோதனையின் இன்னொரு நோக்கமாக உள்ளது. அதுபோலவே, மனந்திரும்பாதவர்கள் சோதனையில் தவறிப்போய், உண்மையான தேவனை எதிர்த்து நிற்பவர்களைப் போலவே வெளிப்படுத்தப்படுவார்கள். பழைய ஏற்பாட்டில் இதைப்போன்ற இணைக்கருத்து ஒன்றைக் காண்பதற்கு, உபாகமம் 4:34; 7:19; 29:2, 3 ஆகிய வசனங்களில் "சோதனை" (அதாவது, சோதிக்கப்படுதல்) என்ற வார்த்தையைக் கண்ணோக்கவும். [25]Henry Alford, quoted by Hailey in *Revelation*, 152.

[26]பிலதெல்பியாவில் இருந்த கிறிஸ்தவர்கள், அந்த நாட்களில் ஏற்பட்ட இடர்ப்பாடுகள் சிலவற்றில் இருந்து தப்பித்தனர் என்று சிலர் நம்புகின்றனர். பூமியதிர்ச்சியைப் பற்றிய பயத்தினால், ட்ரேஜன் என்பவர் பிலதெல்பியா நகரில் இருந்து புறம்பே தங்கியிருந்தார் என்றும், பொருளை அபகரிக்கும் காட்டுமிராண்டிக் கும்பல்கள், பெரிய நகரங்களைக் காட்டிலும் குறைவான செல்வங்கள் கொண்டிருந்தபடியால் பிலதெல்பியா நகரத்தைக் கடந்து சென்றனர் என்றும் அவர்கள் கூறுகின்றனர். உலகப் பிரகாரமான இந்த விதிவிலக்குகள் இயேசுவின் வாக்குத்தத்தத்தின் பாகமாக இருந்திருக்கலாம் அல்லது இல்லாதிருக்கலாம், ஆனால் இயேசு தமது மக்களுக்கு உலகப்பிரகாரமான பாதுகாப்பை அல்ல, ஆனால் ஆவிக்குரிய பாதுகாப்பையே அடிப்படையில் கொடுக்கின்றார் என்று வெளிப்படுத்தின புத்தகத்தின் எஞ்சிய பகுதி வலியுறுத்துகிறது. [27]தெய்வீகப் பாதுகாப்பு என்பது பற்றி, 144,000 பேர் (7:3, 4) முத்திரையிடப்படுதலைப் பற்றி கலந்துரையாடலில் அதிகமாய் ஆராயப்படும். இந்தப் புத்தகத்தில், "புயலுக்கு மேலாக உயருதல்" என்ற இனிவரும் பாடத்தில் காணவும். [28]நமது திராணிக்கு மேலாக நாம் சோதிக்கப்பட மாட்டோம் (1 கொரிந்தியர் 10:13) என்பது போன்ற கர்த்தருடைய வாக்குத்தத்தத்தின் பிற காரணிகள் உள்ளடங்கியிருக்கின்றன. [29]''சீக்கிரமாய் வருகிறேன்'' என்ற சொற்றொடர், தற்காலிக வருகையையோ அல்லது இரண்டாம் வருகையையோ குறிப்பிடக்கூடும். இயேசு எந்த வேளையிலும் வரலாம் என்ற கருத்தமைவில், இரண்டாம் வருகையானது "நிச்சயமானதாக" நினைக்கப்படலாம் (யாக்கோபு 5:7, 9; பிலிப்பியர் 4:5ஐக் காணவும்), ஆனால் சந்தர்ப்பப் பொருளானது தற்காலிக வருகைக்கே ஆதரவாக உள்ளது. [30]திருடன் ஒருவனால் திருடப்பட்ட செல்வம் என்ற உருவகத்தை இயேசு, கிரீடம் (அதாவது, இரட்சிப்பு) என்பது இழந்துபோகப்படவும் கூடியதாக உள்ளது என்ற உருவகத்திற்குப் பயன்படுத்தினார். வெளிப்படுத்தின விசேஷத்தில், விசுவாசவிலக்கம் சாத்தியமானதுதான் என்பதைப் போதிக்கும் அநேக வசனப்பகுதிகளில் இதுவும் ஒன்றாக இருக்கிறது. இருப்பினும், இந்த உருவகம் அந்த சத்தியத்தை விவரிப்பதாக மாத்திரம் உள்ளது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். இது, யாரேனும் ஒருவர் உங்கள் இரட்சிப்பைத் தமக்காக எடுத்துக்கொண்டு, அவ்வாறு எடுக்கப்பட்ட உங்கள் இரட்சிப்பை அவர் நித்தியத்திற்கும் அனுபவிக்க முடியும் என்று போதிப்பதில்லை.

[31]"பற்றிக்கொண்டிரு" என்பது நிகழ்கால வினைச்சொல்லாக உள்ள ஒரு தனித்த கிரேக்க வினைச்சொல்லை மொழிபெயர்த்ததாக உள்ளது, இது தொடர்ந்து நடைபெறும் செயலைக் குறிக்கிறது. அவர்கள் தொடர்ந்து ''பற்றிக்கொண்டிருக்கும்படி'' அறிவுறுத்தப்பட்டனர். [32]''ஆலயம்'' என்பது (1 கொரிந்தியர் 3:16; எபேசியர் 2:21; மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் 11:1, 2 ஆகிய வசனங்களில் உள்ளதுபோல்) சபையை அர்த்தப்படுத்தக்கூடும். இயேசு, நிறைவாக வெற்றியடையப் போகின்றவர்களைப் பற்றிப் பேசியதால், "ஆலயம்" என்பது அனேகமாக - வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தின் பெரும்பான்மையான பகுதிகளில் குறிப்பிடப்படுவது போல - பரலோகத்தைக் குறிப்பிடுவதாக இருக்கலாம் (11:19; 14:17ஐக் காணவும்). பிற்பாடு யோவான், பரலோகத்தில் ஆலயம் எதையும் தான் காணவில்லை என்று கூறினாரே (21:22) என்று சிலர் மறுப்புரைக்கின்றனர். உருவகங்கள் இந்தப் புத்தகத்தினூடே மாறக்கூடும் மற்றும் சீர்த்தன்மை என்பது மிகமுக்கியமான காரணியல்ல என்பவற்றை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். இருப்பினும், 3:12ஐ 21:22 உடன் ஒப்புரவாக்க வேண்டியது அவசியம் என்று நீங்கள் நினைத்தால், பின்வருவது பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள்: பரலோகம் முழுவதுமே தேவனுடைய ஆலயமாயிருக்கும் (அங்கு நாம் அவரை ஆராதித்து அவரைச்

சேவிப்போம்); இவ்விதமாக, யோவான் அங்கு, "ஆலயம்" என்று அழைக்கப்பட்ட கட்டிடம் ஒன்றைக் கண்டிருக்க மாட்டார். [33]இன்றைய நாட்களில் எழுப்பப்படுகின்ற நினைவு வில்லைகள் அல்லது பிற நினைவுச்சின்ன வகைகள் பற்றிய ஒப்பீடு ஒன்றை ஏற்படுத்த முடியும். [34]அலாஷெர் என்பது இந்தக் கிராமத்தின் பெயராக உள்ளது. [35]இந்தப் பகுதியில், பழங்காலத்திய சபைக்கட்டிடம் ஒன்றின் சிதிலங்கள் உள்ளன - இது, அங்கு ஒருகாலத்தில் இயேசுவைப் பற்றிய விசுவாசம் மலர்ந்து செழித்திருந்தது என்பதை நினைவூட்டுவதாக உள்ளது - அதே வேளையில், தெருவின் குறுக்கே, ஒரு பெரிய முஸ்லீம் மசூதியானது இன்னமும் அன்றாடம் பயன்படுத்தப்படுவதாக உள்ளது. [36]கிரேக்க வசனப்பகுதியில் இவ்விடத்தில் இரண்டு எதிர்மறைச் சொற்கள் பயன்படுத்தப்படுதலானது இந்தக் கூற்றை வலிவார்ந்ததாகச் செய்கிறது: "He will *not* go out, by *no* means!" (அதினின்று அவன் ஒருக்காலும் நீங்குவதில்லை.) [37]Quoted by James M. Tolle, *The Seven Churches of Asia* (Pasadena, Tex.: Haun Publishing Co., 1968), 69. [38]வசனம் 12ல் தேவன் உயர்த்தப்படுகின்றார்: "என் தேவன்" என்ற சொற்றொடர் நான்கு முறைகள் வருகிறது. [39]இந்த "எருசலேம்" என்பது "பரலோகத்தில் இருந்து இறங்கி வருகிறது" என்பதால், சிலர் இதை பூமியில் உள்ள சபையுடன் அடையாளப்படுத்தியுள்ளனர். சிலர், இது "இயேசுவின் ஆயிரம் ஆண்டுகள் அரசாட்சி"யாக உள்ளது என்றும்கூடக் கருத்துத் தெரிவித்துள்ளனர். இருப்பினும், இது பரலோக வட்டாரத்தில் உள்ள மகிமைப்படுத்தப்பட்ட சபையைக் குறிக்கிறது என்றும் "பரலோகத்தில் இருந்து இறங்கி வருகிற" என்ற சொற்றொடரானது, இது நமக்காகத் தேவன் அருளுகிறது என்பதை மாத்திரமே வலியுறுத்துகிறது என்றும் பெரும்பாலான எழுத்தாளர்கள் ஒப்புக்கொள்கின்றனர். [40]எபிரெயர் 13:14ஐக் காணவும்.

[41]அனேகமாக, முன்பே 2:17ல் குறிப்பிடப்பட்ட அதே "புதிய நாமமாக" இருக்கலாம். பிலதெல்பியா நகரத்திற்கு ஆண்டுகளினூடே பல்வேறு பெயர்கள் தரப்பட்டிருந்தபடியால், அதில் குடியிருந்தவர்களுக்கு, "புதிய நாமம்" என்பதன் கருத்து, விசேஷித்த தனிச்சிறப்பான குறிப்பைக் கொண்டதாக இருந்திருக்கும். [42]நீங்கள் உங்களுக்கு - மற்றும் உங்கள் உரையைக் கேட்பவர்களுக்கு - நடைமுறைப் பயன்பாட்டை மேற்கொள்ள விரும்பலாம். அவர்கள் கிறிஸ்தவரல்லாதவர்களாய் இருந்தால், சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியும்படி அவர்களை ஊக்குவியுங்கள் (நடபடிகள் 2:36-38).

---

## மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. ஏழு சபைகளில் மிகச்சிறந்தது எது? மிகவும் மோசமானது எது? (அடுத்த பாடத்தைக் காணவும்.)
2. "பிலதெல்பியா" என்ற பெயர் எதை அர்த்தப்படுத்துகிறது?
3. அட்டாலஸ் ஏன் பிலதெல்பியாவை நிலைநாட்டினார்? இது அங்குள்ள சபைக்குக் கர்த்தரின் நோக்கத்துடன் எவ்வாறு உறவுபடுகிறது?
4. பிலதெல்பியா கொண்டிருந்த புவியியல் ரீதியான பிரச்சனை என்ன? இந்தப் பிரச்சனையானது இக்கடிதத்தின் முடிவுப்பகுதியில் ஏற்படுத்தப்பட்ட வாக்குத்தத்தங்களில் பிரதிபலிக்கிறதா?

5. புதிய ஏற்பாட்டில், ''திறந்த வாசல்'' என்ற உருவகம் எதைக் குறிப்பிடுகிறது?
6. "கொஞ்சம் பெலன்" என்பது அவமதித்தலையா அல்லது பாராட்டு தலையா, எதை நோக்கங் கொண்டிருந்தது?
7. "சாத்தானுடைய கூட்டம்" என்பது எதுவாக இருந்தது?
8. யூதர்கள் எந்தக் கருத்தமைவில் கிறிஸ்தவர்களின் பாதங்களில் "பணிந்து" கொள்வார்கள்?
9. ''பூச்சக்கரத்தின்மேலெங்கும் வரப்போகிற சோதனைகாலம்'' என்பது எதுவாக இருந்தது?
10. அவர்களை இயேசு, ''சோதனைகாலத்தில்'' தப்புவிப்பதாகக் கூறியபோது, கிறிஸ்தவர்கள் சோதனையில் இருந்து விதிவிலக்குப் பெறுவார்கள் என்று அவர் அர்த்தப்படுத்தினாரா?
11. வெளிப்படுத்தின விசேஷத்தில், ''பூமியின் மீதெங்கும் குடியிருக்கிறவர்கள்" என்பவர்கள் யார்?
12. 3:12ல் "தூண்" என்ற சொற்றொடரின் சில மறைவான கருத்துக்கள் யாவை?
13. புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில், தூண்களில் பெயர்கள் எழுதப்பட்டது ஏன்?
14. "புதிய எருசலேம்" என்றால் என்ன?
15. இந்தக் கடிதத்தில் உங்களுக்கு அறைகூவல் விடுத்த அல்லது ஆறுதல் படுத்திய விஷயம் எதையாவது நீங்கள் கண்டறிந்தீர்களா?



*புதிய எருசலேம் (21:2, 10)*